Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 323

வியாழக்கிழமை
16 ஒக்ரோபர் 2025

புரட்டாதி 30 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## பெருமளவு கஞ்சாவுடன் கேரதீவில் இருவர் கைது

கிளிநொச்சி, ஒக். 16
பூநகரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கேரதீவுப் பகுதியில், கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
சிறப்பு அதிரடிப் படையினருக்குக் ☞11

முறையான அனுமதி இல்லாமல்

# நுண்நிதி நிறுவனங்கள் செயற்படுவதற்குத் தடை

## முறையாக ஒழுங்குபடுத்தவும் திட்டம் வேலணை பிரதேசசபை உடும்புப்பிடி!

**யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 16**
வேலணைப் பிரதேசசபையின் ஆளுகைக்குள் நுண்கடன் நிதி நிறுவனங்கள் முறையான அனுமதி இல்லாமல் இயங்குவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், நுண்நிதி நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பில் கட்டமைக்கப்பட்ட ஒழுங்குமுறை ஒன்றை உருவாக்கவும் சபை தீர்மானித்துள்ளது. ☞11

## இந்தியாவுக்குச் செல்கிறார் பிரதமர் ஹரிணி அமரசூரிய

### மோடியுடனும் சந்திப்பு



கொழும்பு, ஒக். 16
பிரதமர் ஹரிணி அமரசூரிய, சீனாவுக்கான தனது பயணத்தை நிறைவுசெய்து இன்று இந்தியாவுக்குச் செல்லவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.
இன்று, நாளை, நாளைமறுதினம் ☞09

ஆசிரியர்களின்

## இடமாற்றங்களுக்கு எதிராக மேன்முறையீடு செய்யலாம்!

### மேன்முறையீட்டுக் காலமும் நீடிப்பு வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 16
ஆசிரிய இடமாற்றங்களில் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கருதும் எந்தவொரு ஆசிரியரும், மேன்முறையீடு செய்ய முடியும் என்று வடக்கு மாகாண ☞09



கோப்பாய்

## பொலிஸ்நிலையக் காணி உரியோரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 16
கோப்பாய் பொலிஸ் நிலையம் அமைந்துள்ள காணியிலிருந்து பொலிஸார் வெளியேற்றப்பட்டு, அந்தக் காணிகள் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.
யாழ்ப்பாணம் இராசபாதையில் உள்ள சில வீடுகளிலும், காணிகளிலுமே ☞11

## செவ்வந்தி பிடிபட்டது எப்படி? பொலிஸார் போட்ட 'ஸ்கெட்ச்'

கொழும்பு, ஒக். 16
செவ்வந்தியைக் கைது செய்வதற்காக பொலிஸ் அதிகாரி நேபாளத்துக்குச் செல்வதற்கு முன்னர், மிக இரகசியமான நடவடிக்கையொன்று பொலிஸ் மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
இது தொடர்பில் தெரியவருவதாவது:-
செவ்வந்தி நேபாளத்தில் இருக்கின்றார் ☞11

## நேபாளத்தில் இருந்து நேற்று நாடுகடத்தப்பட்டார் செவ்வந்தி

கொழும்பு, ஒக். 16
நேபாளத்தில் கைதுசெய்யப்பட்ட இஷாரா செவ்வந்தி உள்ளிட்ட ஆறு பேரும், நேற்று மாலை நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட நிலையில், விசாரணைக்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத் ☞09



## மாகாணத் தேர்தல் அறிவிப்பை துணிவிருந்தால் வெளியிடுங்கள்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் முழக்கம்

கொழும்பு, ஒக். 16
அநுர அரசாங்கத்துக்குத் துணிவிருந்தால், மாகாணசபைத் தேர்தல் தொடர்பான உறுதியான அறிவிப்பை வெளியிட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.
கண்டிக்கு நேற்றுச் சென்றிருந்த எதிர்க்கட்சித் தலைவர், மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசிபெற்றார். அதன்பின்னர் சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறியுள்ளார். ☞11



முச்சந்தி முரளி

'வரலாற்றில முதல்முறையா பொலிஸ்காரர் அகதியா இடம்பெயர்ந்திருக்கினம் எண்டு சொல்லுங்கோ'

## சிலாவத்துறை கடற்பரப்பில் மீனவரைக் காணவில்லை!

### தேடல் பணிகள் தீவிரம்

மன்னார், ஒக். 16
மன்னார் சிலாவத்துறை கடற்பரப்பில் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மீனவர் ஒருவர் நேற்றுக் காணாமற்போயுள்ள நிலையில் அவரைத் தேடும்பணிகள் முன்னெடுக்கப் ☞11

யாழ். பல்கலைக்கழக

## முன்னாள் விரிவுரையாளர் இரட்ணம் காலமானார்!



யாழ்ப்பாணம், ஒக். 16
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் சந்தைப்படுத்தல் துறைத் தலைவரும், முன்னாள் ☞11

வாய்பேச முடியாத

## யுவதிமீது துஷ்பிரயோக முயற்சி சந்தேகநபருக்கு விளக்கமறியல்!

யாழ்ப்பாணம், ஒக். 16
வாய்பேச முடியாத யுவதி மீது துஷ்பிரயோக முயற்சி மேற்கொண்ட குற்றச்சாட்டில், சந்தேகநபர் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட் ☞11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி: 15.10.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 4225
ஆங்கில எழுத்து: F
வெற்றி இலக்கங்கள்: 26 62 64 67
விசேட எழுத்து: F

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி: 15.10.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 1292
வெற்றி இலக்கினம்: கன்னி
வெற்றி இலக்கங்கள்: 07 21 22 36

**NLB ஜய**
திகதி: 15.10.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 0251
ஆங்கில எழுத்து: M
வெற்றி இலக்கங்கள்: 5 6 6 3

**மெகா பவர்**
திகதி: 15.10.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 2331
ஆங்கில எழுத்து: Q
சுப்பர் இலக்கம்: 13
வெற்றி இலக்கங்கள்: 06 28 42 46

**மஹஜன சம்பத**
திகதி: 15.10.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 5983
ஆங்கில எழுத்து: D
வெற்றி இலக்கங்கள்: 2 8 0 5 4 4

**தன நிதானய**
திகதி: 15.10.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 2013
ஆங்கில எழுத்து: L
வெற்றி இலக்கங்கள்: 04 13 65 69
விசேட எழுத்து: L

**அத சம்பத**
திகதி: 15.10.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 0558
ஆங்கில எழுத்து: D
வெற்றி இலக்கங்கள்: 0 5 4 4

**சுப தவசக்**
திகதி: 15.10.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 0099
வெற்றி இலக்கினம்: கடகம்
வெற்றி இலக்கங்கள்: 03 20 22 36

# போர்க்குற்றச் சாட்சிகளிருந்தால் விசாரணை நடத்துவது அவசியம்

*சரத் பொன்சேகா தெரிவிப்பு*

**கொழும்பு, ஒக்.16**

**இறுதிப்போரின்போது ஏதேனும் போர்க்குற்றங்கள் இடம்பெற்றுள்ளன என்பதற்குரிய சாட்சிகள் இருந்தால் நிச்சயம் விசாரணை நடத்தப்படவேண்டும் என்று இலங்கையில் இறுதிக்கட்டப் போரை வழிநடத்திய இராணுவத்தளபதி பீல்ட்மார்ஷல் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சாட்சி இருந்தால், முறைப்பாடு கிடைக்கப்பெற்றால், இடம், சம்பவம், திகதி என்பன தெரிந்திருந்தால் நிச்சயம் விசாரணை நடத்தப்படவேண்டும். ஆனால் போலித் தகவல்களைக் கருத்திற் கொள்ள வேண்டியதில்லை. 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர் என்றெல்லாம் தமிழ் அரசியல்வாதிகளால் போலிக் கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. ஒட்டுமொத்த இராணுவமும் தவறிழைத்தது எனச் சிலர் துள்ளிக் குதிக்கின்றனர். இப்படியான கருத்துகள் பற்றி விசாரிக்கமுடியாது அல்லவா? விசாரணை நடத்துவதாக இருந்தால் ஏதேனும் மூலம் அவசியம்.

விசாரணை நடத்தப்பட்டாலும் அது தேசிய விசாரணையாகவே இருக்க வேண்டும். எனினும், வெளிநாட்டில் இருந்தும் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுவதால் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களை வைத்திருப்பது நல்லது. அப்போது வெளிப்படைத்தன்மை இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-44)

**சுபிரி தன சம்பத**
திகதி: 1.10.2025
தினம்: புதன்கிழமை
வெற்றி வாரம்: 069
ஆங்கில எழுத்து: C
வெற்றி இலக்கம்: 1 4 5 2 5 0

**Super Ball** DLB
திகதி: 15.10.2025
தினம்: புதன்கிழமை
சீட்டிழுப்பு வாரம்: 2957
ஆங்கில எழுத்து: S
வெற்றி இலக்கம்: 09 17 21 47


**சனிதா** DLB
திகதி: 15.10.2025
தினம்: புதன்கிழமை
ஆங்கில எழுத்து: G
வெற்றி இலக்கம்: 51 60 71 77
வெற்றி வாரம்: 5018

**லக்ன ராசி**
திகதி: 15.10.2025
தினம்: புதன்கிழமை
கும்பம்
வெற்றி இலக்கம்: 08 17 18 57
சீட்டிழுப்பு வாரம்: 4669

**KAPRUKA** DLB
திகதி: 15.10.2025
தினம்: புதன்கிழமை
ஆங்கில எழுத்து: M
சுப்பர் இலக்கம்: 37
வெற்றி இலக்கம்: 47 58 69 70
வெற்றி வாரம்: 2133

**அத கோடிபதி** DLB
திகதி: 15.10.2025
தினம்: புதன்கிழமை
ஆங்கில எழுத்து: I
வெற்றி இலக்கம்: 13 23 46 72
வெற்றி வாரம்: 2783

**JAYODA** DLB
திகதி: 15.10.2025
தினம்: புதன்கிழமை
ஆங்கில எழுத்து: I
வெற்றி இலக்கம்: 14 16 19 47
வெற்றி வாரம்: 2170



## வல்வெட்டித்துறை நகரசபையின் உறுப்பினரானார் சிவாஜிலிங்கம்

**யாழ்ப்பாணம், ஒக்.16**

வல்வெட்டித்துறை நகரசபையின் புதிய உறுப்பினராக எம்.கே.சிவாஜிலிங்கம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வல்வை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயப் பிரதமகுருவும், சமாதான நீதிவானுமான தண்டாபாணிக தேசிகர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

கடந்த உள்ளூராட்சிசபைத் தேர்தலின்போது வல்வெட்டித்துறை நகரசபையில் தமிழ்த்தேசியப் பேரவை சார்பாகப் பட்டியல் உறுப்பினராக எம்.கே. சிவாஜிலிங்கத்தின் பெயர் காணப்பட்டது. எனினும், தேர்தல் முடிவுகளுக்கமையப் பட்டியல் உறுப்பினராகப் பெண் உறுப்பினர்களையே தெரிவு செய்யவேண்டுமெனத் தேர்தல் ஆணைக்குழு அறிவித்தமையால் அவர் தமிழ்த்தேசியப் பேரவை சார்பில் பட்டியல் உறுப்பினராகத் தெரிவுசெய்யப்படவில்லை.

இந்நிலையில் தமிழ்த்தேசியப் பேரவையின் வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர் அப்புலிங்கம் உதயசூரியன் தனது உறுப்பினர் பதவியிலிருந்து தானாக முன்வந்து அண்மையில் இராஜினாமா செய்தநிலையில் அவரது வெற்றிடத்துக்குப் புதிய உறுப்பினராகச் சிவாஜிலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். (ச-66)

## சிவப்பு நண்டுத் தாக்கத்தால் வாழ்வாதாரம் பாதிப்பு!

*தாழ்வுபாடு மீனவர்கள் கவலை*

**மன்னார், ஒக்.16**

மன்னார் மாவட்டம் தாழ்வுபாடுக் கடற்பரப்பில் காணப்படும் சிவப்பு நண்டு என அழைக்கப்படுகின்ற ஒரு வகையான நண்டின் தாக்கம் காரணமாக வலைகள் சேதடைந்து வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மன்னார்த் தீவுப்பகுதி கடற்றொழில்சார் கிராமங்களைக் கொண்ட பகுதியாகும். இவற்றில் தாழ்வுபாடுக் கிராமமும் ஒன்றாகும். குறித்த கிராமத்தில் கடந்த பல நாள்களாக 'சிவப்பு நண்டு' என அழைக்கப்படுகின்ற ஒரு வகையான நண்டினால் மீனவர்களின் வாழ்வாதாரம் முற்றாகப்பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நண்டுகள் மீனவர்களின் வலைகளில் பெருமளவில் சிக்குவதால் மீனவர்களின் வலைத் தொகுதிகள் சேதமடைகின்றன.

குறித்த நண்டை எந்த ஒரு தேவைக்கும் பயன்படுத்தமுடியாத நிலை காணப்படுகின்றது.

இதனால் எமது வலைகள் பாதிக்கப்படுவதோடு வாழ்வாதாரமும் சீர்குலைகின்றது என்றும் அப்பகுதி மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ச-56)



## போதைத் தடுப்புப் பிரிவு பணிப்பாளராக ஹேரத்

**கொழும்பு, ஒக்.16**

போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பணிப்பாளராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.சி.பி ஹேரத் நியமிக்கப்பட்டுள்ளார்.

போதைப்பொருள் தடுப்புப்பிரிவின் பணிப்பாளராகப் பணியாற்றிவந்த ஜி.எச்.பிரசாந்த், களப்படைத் தலைமையகத்துக்கு மாற்றப்பட்டுள்ளமையால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு ஹேரத் நியமிக்கப்பட்டுள்ளார். (ச-இ)

## ரிஷாத் வழக்குத் தள்ளுபடி

**கொழும்பு, ஒக்.16**

இலங்கையின் வடக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பாக 2018ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக நாகலந்த கொடிதுவக்கு மற்றும் மலிந்தசேனவிரத்ன ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் நேற்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

ஏழு ஆண்டுகளாக நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த இந்த வழக்கில் பலமுறை நீதிமன்ற உத்தரவு வழங்கப்பட்டதன் பின்னரும் வழக்குத்தாக்கல் செய்தவர்கள் நடைமுறைப்படி வழக்கை முன்னெடுக்கத் தவறியதால் வழக்கைத் தள்ளுபடி செய்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச-இ)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஞாயிற்றுக்கிழமைகளிலும் நெடுந்தீவுக்குப் படகுச்சேவை

யாழ்ப்பாணம், ஒக்.16

**நெடுந்தீவுக்கு ஞாயிற்றுக்கிழமைகளிலும் படகுச் சேவையை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

நெடுந்தீவுக்கான வடதாரகை மற்றும் நெடுந்தாரகைப் படகுச் சேவைகள் ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை நாளாகக் கருதித் தவிர்க்கப்பட்டிருந்தன.

நெடுந்தீவுப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் படகு பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டின்கீழ் திருத்த வேலைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதால் தற்போது ஞாயிற்றுக்கிழமை படகுச்சேவை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்டச் செயலர் முன்வைத்த கோரிக்கைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்ட போக்குவரத்துத் தொடர்பான செயற்குழுவின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் யொ.குருஸ், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், பெருந்தெருக்கள் துறைமுகம் மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் பிரத்தியேக இணைப்பாளர் ஸ்ரீவர்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

காலை 6.30 மணிக்கு நெடுந்தீவிலிருந்து புறப்படும் படகு காலை 7.30 மணியளவில் குறிகாட்டுவானை அடையும்.

குறிகாட்டுவானில் இருந்து காலை 7.30 மணிளவில் நெடுந்தீவுக்குப் படகு புறப்படும். மாலை 3.30 மணியளவில் நெடுந்தீவில் இருந்து படகு குறிகாட்டுவானுக்குப் புறப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-66)




# இது தகுமா?

## இ.போ.ச. அக்கறையீனம்

யாழ்ப்பாணம், ஒக். 16

ஆபத்தான முறையில் பயணிகள் பின்புறமும் தொங்கியவாறு கிளிநொச்சியில் இ.போ.ச.பேருந்து பயணிகளை ஏற்றிச் சென்றுள்ளது.

கிளிநொச்சி முழங்காவில் பகுதியிலிருந்து நேற்று கிளிநொச்சி நோக்கிப் புறப்பட்ட இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்தே இவ்வாறு ஆபத்தான முறையில் அதிகளவு பயணிகளை ஏற்றிக்கொண்டு பயணித்துள்ளது. பொதுமக்களின் பாதுகாப்புக் கருதி பேருந்து நடத்துநர்கள் மற்றும் சாரதிகள் பொறுப்போடு நடந்துகொள்ள வேண்டும் என இதுகுறித்து பலரும் தெரிவித்துள்ளனர். (ச-214)

# 40 குற்றவாளிகளுக்கு சிவப்பு அறிவித்தல்!

கொழும்பு, ஒக்.16

வெளிநாடுகளில் தலைமறைவாகியுள்ள 40 குற்றவாளிகளுக்கு எதிராக சிவப்பு அறிவிப்புகள் விடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எப்.யு.கே.வுட்லர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

குறிப்பிட்ட 40 பேரில், 18 குற்றவாளிகளை இந்த வருடத்துக்குள் இலங்கைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும். அதேவேளை, கணேமுல்ல சஞ்சீவ கொலைவழக்கில் தேடப்பட்டுவந்த இஷாரா செவ்வந்தி என்ற பெண் நேபாளத்தில் கைதுசெய்யப்படுவதற்கு குற்றப்புலனாய்வுத் திணைக்களம், விசேட புலனாய்வுப் பிரிவுகள் மற்றும் வெளிநாடுகளின் ஒத்துழைப்புகள் கிடைத்தன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)



# பாதாள உலகக் குழுக்களின் ரூ.3,092 கோடி சொத்து பறிமுதல்

கொழும்பு, ஒக்.16

பாதாள உலகக் குழுக்களுக்குச் சொந்தமான சுமார் 3 ஆயிரத்து 92 கோடி ரூபா மதிப்புள்ள சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எப்.யு.கே.வுட்லர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பாதாள உலகக் குழுக்களுக்குச் சொந்தமான சொத்துகளை அரசாங்கத்திடம் ஒப்படைப்பதற்குப் பொலிஸார் தொடர்ந்து நடவடிக்கை எடுத்துள்ளனர்.

போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு சொந்தமான 354 பவுண் தங்கநகைகளும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

சட்டவிரோதமாகச் சம்பாதித்த பணத்தின்மூலம் சேகரிக்கப்பட்டவையாகக் கருதப்படும் 72 வாகனங்கள், 35 வீடுகள், 34 ஏக்கர் காணிகள் மற்றும் 67 கோடி ரூபா பணம் ஆகியவற்றை அரசாங்கத்திடம் ஒப்படைப்பதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர் - என்றார். (எ-இ)




## பழிக்குத்துணை பன்னிரு தோள்; அப்ப வழிக்குத் துணை...?

அனுமார் வாலைப் போல உந்த பஸ் புராணத்துக்கும் ஒரு அளவில்லைப் போல. நேற்று கொழும்புக்கு போற பிரைவேட் பஸ்ஸுகளைப் பற்றி பட்சி சொன்னதெல்லோ. அதைப் பார்த்திட்டு. கனபேர் போன் பண்ணி இன்னும் சில விசயங்களைச் சொன்னவை. அதையும் பதிவு செய்யிறது நல்லது. இப்பத்தை பலூன் பஸ்ஸுகளில 'அஜஸ்ட்மெண்ட் சீற்' இருக்கும். அந்த சீற்றில இருக்கிறவை தங்கட வசதிக்கு ஏற்றமாதிரி நீட்டி.நிமிர்ந்து படுக்கிறதுக்கு அந்த சீற்றை பின்னுக்கு தேவையான அளவுக்கு சரிக்கலாம். அதுக்கு கைவைக்கிற இடத்துக்கு கிட்ட ஒரு லிவர் இருக்கும். அதைப்பிடிச்சு அமத்தினால், சீற் பின்னால சரியத் துடங்கும். தேவையான அளவு வந்தவுடன லிவரை விட, சீற்றும் அப்பிடியே நிக்கும். ஆனால் கனக்க பஸ்ஸுகளில உந்த லிவர் எங்க இருக்கெண்டு தேடிக் கண்டுபிடிக்கிறதே பெரும்பாடாக் கிடக்காம். சில நேரங்களில லிவர் ஒழுங்கா வேலை செய்யாததால முன்சீற்றில இருக்கிறவை நல்லாச் சரிஞ்சு, பின்னுக்கு உள்ளவையின்ர காலை நசுக்க, இவையள் பின்னாலையும் சரிய ஏலாமல், முன்னாலையும் போக ஏலாமல் கொழும்பு மட்டும் இந்தச் சித்திரவதையைத் தாங்கிக் கொண்டுதான் போகோணும்.

இது மட்டுமில்லை , இன்னொரு சித்திரவதையும் இருக்கும். தங்கட பஸ்ஸுல போற ஆக்கள் தனிய இருந்து கஷ்டப்படக் கூடாது எண்டு பஸ்காரர் ஒரு ஸ்பெஷல் ஏற்பாடு ஒண்டு செய்திருப்பினம். அதுதான் மூட்டைப் பூச்சி. எல்லா சீற்றிலையும், ஆக்கள் போய் இருந்தவுடனேயே கைத்தீன் குடுத்து வளர்த்த கிடாய் மாதிரி வதவத எண்டு மூட்டைப்பூச்சியள் உங்களைச் சுகம் விசாரிக்க வந்திடுவினம். பிறகென்ன, போகும் வரைக்கும் அவைதான் உங்களுக்கு வழித்துணை. மூட்டைப்பூச்சியளின்ர கடி தாங்காமல் சொறிஞ்சு சொறிஞ்சு ஏலாக் கட்டத்தில சீற்றை விட்டு எழும்பி நிண்டுகொண்டு போற ஆக்களும் இருக்கினம். இதைப்பற்றி ரைவர்மாரிட்டையோ, கொண்டக்டர்மாரிட்டையோ சொன்னாலும் அவையளும் அதைக் காதுகுடுத்துக் கேக்காயினம். எப்பவாது கேட்டாலும் "ஏதோ நாங்கள் தான் உதுகளுக்கு மாஸ் போட்டு வளர்க்கிற மாதிரியெல்லோ கதைக்கிறியள். சீற் எண்டால் இப்பிடி மூட்டைப் பூச்சியள் இருக்கத்தான் செய்யும்" எண்டு சொல்லிப்போட்டு இருந்திடுவினம்., அடுத்த நாளாவது சீற்றைகிளீன் பண்ணுவம், மூட்டைப்பூச்சிக்கு மருந்து அடிப்பம் எண்டு அவையள் யோசிக்கிறேலை. அவைக்கு பஸ் ஓடினால் சரி.

எவ்வளவுநாள் தான் இப்பிடி மூட்டைப்பூச்சியோட பயணம் போகமுடியும்? கிட்டடியில ஒருத்தர் இனியும் கடி தாங்கேலாது எண்ட நிலையில, சீற்றுக்கால மூட்டைப்பூச்சியள் வந்து கடிக்கிறதை வீடியோ எடுத்து பேஸ்புக்கில போட்டிருக்கிறார். அந்த வீடியோ பஸ் முதலாளியின்ர பார்வைக்கும் போட்டுது. உடனேயே அந்த பஸ்முதலாளி, அடுத்தநாள் எல்லா பஸ்ஸையும் கொழும்புக்கு போகாமல் நிக்கப்பண்ணி, அந்த பஸ்ஸுகளையும் சீற்றுகளையும் கிளீன் பண்ணி, மருந்தடிச்சு, "மூட்டைப்பூச்சியில்லாத சுத்தமான பஸ்" எண்ட நிலை வந்த பிறகு "இவ்வளவு நாளும் எங்கட பஸ்ஸில மூட்டைப்பூச்சியால பாதிக்கப்பட்டவை மன்னிச்சுக்கொள்ளுங்கோ. இனிமேல் அப்பிடி மூட்டைப்பூச்சியள் எங்கட பஸ்ஸில வராமல் பாப்பம்" எண்டு மன்னிப்பும் கேட்டிருக்கிறார். மன்னிப்புக் கேக்கிறவன் மனுசன், மன்னிக்கிறவன் பெரிய மனுசன். இப்ப பெரிய மனிசரா மன்னிக்கலாம், ஆனால் அவை பிறகும் விளையாட்டுக்காட்டினால், அதுக்குப் பிறகு உரிய நடவடிக்கை எடுக்கத்தான் வேணும் கண்டியளோ.

padsi@uthayan.com

-பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சிலருக்கு அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். மாலையில் உற்சாகமாகக் காணப்படுவீர்கள். புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**இடபம்:** மகிழ்ச்சியான நாள். புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். கோயில்களை தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும். அலுவலகத்தில் சக ஊழியர்கள் அனுசரணையாக இருப்பார்கள். வியாபாரம் வழக்கம் போலவே நடைபெறும்.

**மிதுனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவம் நடைபெறும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். எதிர்பாராத செலவுகள் ஏற்படும்.

**கடகம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகமாக இருப்பீர்கள். ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும். பணிச்சுமை குறையும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு நவீன டிசைனில் ஆடை வாங்கும் வாய்ப்பு ஏற்படும். உங்கள் தேவையறிந்து நண்பர் செய்யும் உதவி மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** குடும்பம் அல்லது வேலை தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதை இன்றைக்குத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சிலர் கடன் வாங்கவும் நேரிடும். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம்.

**துலாம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். வீண்விவாதம் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.

**விருச்சிகம்** : காரியங்கள் அனுகூலமாகும் நாள். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் உண்டாகும். ஆதாயம் உண்டாகும். புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள்.

**தனுசு:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் சென்று வரும் வாய்ப்பு ஏற்படும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் மறையும். நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள்.

**மகரம்:** உறவினர்கள் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். உணவு விடயத்தில் கவனம் தேவை. உடல் ஆரோக்கியம் மேம்படும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கும்பம்:** காரியங்கள் வெற்றிகரமாக முடியும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உடல் நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். வாழ்க்கைத் துணையால் ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

# நரம்பு, எலும்பு சார்ந்த நோய்களுக்கு முழுமை நிவாரணி சித்தவைத்தியமே




ஒவ்வோர் ஆண்டும் ஒக்டோபர் 16 ஆம் திகதி உலக முதுகெலும்பு நாள் கொண்டாடப்படுகிறது. முதுகெலும்பு நலனின் முக்கியத்துவத்தை உணர்த்துவதும், முதுகுவலி மற்றும் நரம்பு எலும்பு தொடர்பான நோய்களைத் தடுப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதுமே இதன் நோக்கமாகும். மனித உடலின் மையக் கம்பமாக முதுகெலும்பு செயற்படுகிறது. இது உடல் அமைப்பைச் சீராக வைத்திருப்பதுடன், நரம்புக்குழாய்களைப் பாதுகாக்கிறது. நமது உடல் நிமிர்ந்து நிற்பதற்கும், நடப்பதற்கும், வளைப்பதற்கும் இதுவே முக்கியமான பங்குவகிக்கிறது.

இன்றைய வேகமான வாழ்க்கைமுறையில், நீண்டநேரம் அமர்ந்து பணிபுரிதல், சரியான உடற்பயிற்சி இல்லாமை, தவறான உடல் நிலைகள், அதிக எடை மற்றும் மன அழுத்தம் ஆகியவை முதுகு வலிக்கான முக்கியமான காரணங்களாக உள்ளன. வேலை, வாசிப்பு அல்லது மொபைல்/கணினி பயன்படுத்தும்போது முதுகை நேராக வைத்திருத்தல், யோகா, நடைப்பயிற்சி மற்றும் நீட்டிப்புப் பயிற்சிகள் என்பன முதுகுநலத்துக்கு உதவுகின்றன.

கல்சியம் மற்றும் விற்றமின் டி நிறைந்த உணவுகள் எலும்புகளை வலுப்படுத்துகின்றன. அதிக எடை, முதுகில் அழுத்தத்தை ஏற்படுத்துவதும், நீண்டநேரம் அமர்ந்திருத்தலும், கனமான பொருள்களைத் தவறான முறையில் தூக்கும் பழக்கமும் முதுகெலும்பு நலனைக் கடுமையாகப் பாதிக்கின்றன. முதுகெலும்பு நோய்கள், நரம்பு செயலிழப்பு, கைகள் மற்றும் கால்கள் இயங்காமை போன்ற பிரச்சினைகள் அனைத்தும் ஒரேநாளில் திடீரென ஏற்படுவதில்லை. தாமதமான சிகிச்சை, ஒருவரின் வாழ்க்கையையே முற்றிலும் மாற்றிவிடக்கூடும்.

முதலில் கட்டாயமாக ஆங்கில(நவீன) மருத்துவ சிகிச்சைகளை மேற்கொள்ளவேண்டும். பின்னர், 14 முதல் 60 நாள்களுக்குள் சித்த வைத்திய சிகிச்சை பெறுவது நலம். இவ்வாறு சித்த வைத்திய சிகிச்சை பெறுபவர்கள் முழுமையாகக் குணமடைய வாய்ப்புள்ளது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக, மக்களிடம் போதிய விழிப்புணர்வு இல்லாததாலும், சித்த வைத்தியத்தின் ஆழ்ந்த திறனை அறியாததாலும், பலர் இன்று படுக்கையில் கிடக்கும் நிலையில், கைகள் மற்றும் கால்கள் இயங்காமல், குடும்பத்தின் பாரமாக மாறியுள்ளனர். இவ்வாறு வாழ்க்கைப்போராட்டத்தில் தோல்வியடைந்தவர்களுக்கு, சித்த வைத்தியத்தை நோக்கித் திரும்புவது ஒரு நம்பிக்கையின் ஒளியாகும்.

முதுகுவலி ஏற்பட்ட 14ஆம் நாளில் சித்த வைத்திய சிகிச்சையைத் தொடங்குவது, 60ஆம் நாளில் தொடங்குவதைவிடக் கூடுதலான நல்ல மாற்றங்களை ஏற்படுத்தும். எனவே, கட்டாய நவீன மருத்துவ சிகிச்சையை முழுமையாகப் பெற்ற பின்னர், 20 ஆம் நாளுக்குள் அரசு சித்த வைத்தியசாலைகளை நாடவேண்டும்.

## சிகிச்சைபெறக்கூடிய இடங்கள்

பொரளை தேசிய ஆயுர்வேத வைத்தியசாலை, கைதீ மற்றும் கோணேசபுரம் சித்த வைத்தியக் கல்லூரிகள், கம்பஹா விக்கிரமராஜ்சிங்க ஆயுள்வேத வைத்தியக் கல்லூரி, மட்டக்களப்புப் புதுக்குடியிருப்பு ஆயுள்வேத வைத்தியசாலை, முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு ஆயுள்வேத வைத்தியசாலை, கப்பல்துறை ஆயுள்வேத வைத்தியசாலை , மன்னார், வவுனியா, கிளிநொச்சித் தள மருத்துவமனைகள், மாதம்பே ஆயுள்வேத வைத்தியசாலை, மஞ்சந்தொடுவாய் மற்றும் நிந்தவூர் யூனானி ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலைகள், கொடிகாமம், பண்டத்தரிப்பு கிராமிய வைத்தியசாலைகள் போன்றவற்றில் சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ளலாம். இவற்றுக்கு மேலதிகமாக, அனைத்துப் பிரதேசசபைகளின் கீழும் இயங்கும் இலவச சுதேச வைத்தியசாலைகளின் மூலமாகவும் பொதுமக்கள் துல்லியமான சேவைகளை இலவசமாகப் பெறமுடியும்.

நரம்பு அமைப்பு, மனித உடலின் இயக்கம், உணர்வு, நினைவாற்றல் மற்றும் உட்புற உறுப்புகளின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் முக்கியமான அமைப்பாகும். இந்த அமைப்பில் ஏற்படும் கோளாறுகளே நரம்பு நோய்கள் எனப்படுகின்றன. சித்த வைத்தியம், உடல்மனம்ஆன்மா என்ற மூன்று பெரும் அமைப்புகளின் சமநிலையைப் பேணுவதன்மூலம் நோய்களைக் குணப்படுத்தும் ஒருங்கிணைந்த வைத்திய முறையாகும். சித்த மரபுக் கோட்பாட்டில், வாதம், பித்தம், கபம் எனும் மூன்று நோய்க்காரணிகளுக்கிடையே உள்ள சமநிலையே ஆரோக்கியத்தின் அடிப்படையாகும். நரம்பு நோய்கள் பெரும்பாலும் வாதக் கோளாறு காரணமாகவே உருவாகின்றன. வாதம், உடலின் இயக்க சக்தி, நரம்புக் கடத்தல், சிந்தனை, உறக்கக் கட்டுப்பாடு போன்ற செயல்பாடுகளுக்குப் பொறுப்பாகும்.

### வாதம் அதிகரிக்கும் காரணிகள்:

குளிர்ச்சியான உணவுகள், நீண்ட நேர உழைப்பு, மன அழுத்தம், நரம்பு உளைச்சல், இரத்த ஓட்டக் குறைபாடு, ஊட்டச்சத்துக் குறைபாடு போன்றவற்றால் வாதம் அதிகரிக்கக்கூடும். நரம்புத் தளர்ச்சி, அரைப் பக்கவாதம், நரம்பு வலி, நரம்பு நடுக்கம் போன்ற நிலைகள் சித்த வைத்திய நூல்களில் நரம்பு சம்பந்தமானநோய்கள்பலவற்றின்கீழ்விவரிக்கப்பட்டுள்ளன.

### சித்த வைத்திய சிகிச்சை வகைகள்

சித்த வைத்தியத்தில் முக்கியமாக நித்திய நலம், நோய் நீக்கம், மீள்சீராக்கம் என மூன்று முக்கியமான சிகிச்சைகள் உள்ளன

இவை தவிர, உள் சிகிச்சைகள்: சில சித்த மருந்துகளின் உயிரியல் விளைவுகள் சமீபத்திய ஆய்வுகளில் ஆக்ஸிஜனேற்ற எதிர்ப்பு, நரம்புக் காப்பு, அழற்சி எதிர்ப்புமற்றும் தகவமைப்பு போன்ற பண்புகளைக் கொண்டுள்ளன என நிரூபிக்கப்பட்டுள்ளது.

புற சிகிச்சைகள்: எண்ணெய்க் குளியல், தலைச்சுற்று போன்ற புற சிகிச்சைகள் நரம்பு சீரமைப்பில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

ஆதரவு சிகிச்சைகள்: யோகாசனம், பிராணாயாமம்.

உணவியல்: குளிர்ச்சியான மற்றும் புளிப்பான உணவுகளைத் தவிர்த்தல்.

அரசு சித்த வைத்தியர் சங்கத்தின் நரம்பியல் பிரிவினர், ஒக்டோபர் 16 ஆம் திகதியான உலக முதுகெலும்பு தினத்தில் நரம்புக் குறித்த விழிப்புணர்வுச் செய்தியில், "நவீன ஆய்வுகள், சித்த மருந்துகளில் காணப்படும் மூலிகைகள் நரம்பு மண்டலத்தைப் பாதுகாக்கும் நரம்புக் காப்பு, ஆக்ஸிஜனேற்ற எதிர்ப்பு மற்றும் அழற்சி எதிர்ப்பு செயற்பாடுகளைக் கொண்டுள்ளன என நிரூபித்துள்ளன" என்று தெரிவித்துள்ளனர்.

**சித்த வைத்தியர் சங்கத்தின்
நரம்பியல் பிரிவு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



## தேவை தெளிவூட்டல்...!

சர்வதேச நாணயநிதியத்துக்கும் இலங்கைக்கும் இடையிலான ஐந்தாம் கட்டக் கடன் திட்டம் தொடர்பான பேச்சுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. 337 மில்லியன் டொலர் பெறுமதியான இந்தக் கடன் திட்டத்துக்கான பணியாளர்கள்மட்ட உடன்பாடு ஏற்கனவே எட்டப்பட்டுள்ளநிலையில், மேலதிக நடவடிக்கைகள் விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளன. அதிகாரிகள் மற்றும் நிறைவேற்று அதிகாரிகள் மட்ட உடன்பாடுகள் எட்டப்படும் பட்சத்தில், இலங்கைக்கான ஐந்தாம்கட்டக் கொடுப்பனவை நாணயநிதியம் வழங்கும். நாணயநிதியத்துடன் அரசாங்கம் நடத்தி வரும் பேச்சுவார்த்தைகள் தொடர்பில் விசனப்பட ஒன்றுமில்லை. ஏனெனில், இது அவசியமானது. ஆனால், இந்த நகர்வுகள் தொடர்பான முழுமையான புரிதல் மக்களுக்கு ஏற்படுத்தப்படுகின்றதா? என்ற கேள்வி எழுவது தவிர்க்கமுடியாததாக அமைகின்றது.

முன்னாள் ஜனாதிபதி ரணிலின் ஆட்சிக்காலத்தில், நாணயநிதியத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளை, அப்போதைய எதிர்க்கட்சியாக இருந்த தேசிய மக்கள் சக்தி கடுமையாக எதிர்த்தது. 'பேச்சுவார்த்தைகளில் வெளிப்படைத் தன்மை இல்லை', 'நாணயநிதியத்தின் தாளத்துக்கு ஏற்ப இலங்கை அரசாங்கம் ஆடுகின்றது', 'நாணயநிதியத்தின் சொற்களுக்குக் கட்டுப்பட்டு அரச வருவாய்க்காக வரிவருமானம் உயர்த்தப்படவுள்ளது' ஆகிய காரணங்களையே, தமது எதிர்ப்புக்கான நியாயப்பாடாக தேசிய மக்கள் சக்தியினர் முன்வைத்தனர். ஆதலால், குறைந்தபட்சம் தம்மால் அன்று எதிர்க்கப்பட்ட விடயங்களிலாவது தேசிய மக்கள் சக்தியினர் சரிவர நடந்திருக்கின்றனரா? என்ற பரிசீலனையும் கேள்வியும் இங்கு அவசியமாக அமைகின்றன.

இலங்கை பொருளாதாரநெருக்கடியால் இறவாதிருப்பதற்கு இந்தியா வழங்கிய உதவிகளுடன், நாணயநிதியத்தின் கடன்களும் பிரதான காரணம் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், முதலாம்கட்ட கடன் வழங்குகையில் இருந்த வேகம், அடுத்தகட்ட கடன் வழங்குகையின்போது நாணயநிதியத்திடம் கிஞ்சித்தும் இல்லை. நாணயநிதியம் என்பது ஐக்கிய நாடுகளின் முழுமையான நிதிப்பங்களிப்பில் இயங்கும் அறக்கட்டளையல்ல. ஒரு நாடு, தான் பெற்றுக்கொள்ளும் கடன்களை மீளச் செலுத்தக்கூடிய இயலுமையில் இருந்தால், அல்லது அந்த இயலுமையை எட்டக்கூடிய நம்பிக்கையைக் காட்டினால் மட்டுமே நாணயநிதியம் தன் நிதியை அந்த நாட்டுக்கு வழங்கும். ஆதலால், இலங்கையிடம் கடன்களை மீளச் செலுத்துவதற்கான கட்டமைப்பு இன்னமும் இல்லாததால்தான் நாணயநிதியம் மிகுதிக் கடன்களை வழங்காமல் இழுத்தடித்து வருகின்றதா என்ற சந்தேகமும் எழவே செய்கின்றது.

புத்தாண்டுக் காலங்களில், பட்ஜெட் மூலம் வரிகளையே பரிசாக வழங்கிய வரலாறுதான் இலங்கைக்கு உண்டு. அடுத்த நிதியாண்டுக்கான விரிவான பட்ஜெட் தாக்கல் செய்யப்படவுள்ளநிலையில், நாணயநிதியத்துடன் அண்மைக்காலமாகத் தாம் மேற்கொண்டுவரும் பேச்சுவார்த்தைகள் தொடர்பில், விரிவான - முழுமையான தெளிவுபடுத்தலை தேசிய மக்கள் சக்தியினர் வழங்கவேண்டும். அது அவசரமும் அவசியமும் ஆகும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

### நாளொரு நல்வார்த்தை

முயற்சிக்கும்வரை உங்களால் என்ன சாதிக்க முடியும் என்பது உங்களுக்கு ஒருபோதும் தெரியாது.

– மைக்கேல் ஜோர்டன் –






## தனியார்துறை வேதன அதிகரிப்பு ஒப்புதல் வழங்கியது அமைச்சரவை

**கொழும்பு, ஒக்.16**

**2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்துக்கு அமைய தனியார்துறை ஊழியர்களின் குறைந்தபட்ச வேதனத்தை அதிகரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.**

இதற்கமைய கடந்த ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் தனியார்துறை ஊழியர்களின் மாதாந்தக் குறைந்தபட்ச வேதனம் 17 ஆயிரத்து 500 ரூபாவில் இருந்து 27 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், 2026ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் மாதாந்தக் குறைந்தபட்ச வேதனம் 30 ஆயிரம் ரூபாவரை அதிகரிக்கப்படும்.

அதிகரிக்கப்பட்ட மாதாந்தக் குறைந்தபட்ச வேதனமானது, ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி, மேலதிக நேரக் கொடுப்பனவு, பணிக்கொடை, மகப்பேற்றுக் கொடுப்பனவு மற்றும் விடுமுறை தினக் கொடுப்பனவு போன்ற அனைத்துச் சட்டரீதியான கொடுப்பனவுகளுக்கும் பயன்படுத்தப்படவேண்டும் என்றும், அதற்கான ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு தொழில் ஆணையாளர் நாயகத்துக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஏற்பாடுகள் தொடர்பாக பத்திரிகை விளம்பரத்தின்மூலம் ஏற்புடைய தரப்பினர்களுக்குத் தற்போது அறிவிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## பங்குச்சந்தை மூலதனம் 8 ட்ரில்லியன் கடந்தது!

கொழும்பு, ஒக்.16

இலங்கைப் பங்குச் சந்தை வரலாற்றில் ஒரு புதிய மைல்கல் கடந்துள்ளது. அதன்படி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்புப் பங்குச் சந்தையின் மொத்த மூலதன மதிப்பு 8 ட்ரில்லியன் ரூபாவைத் தாண்டியது.

அந்த நாளின் வர்த்தக முடிவில், அனைத்து பங்குகளின் மொத்த விலைச்சுட்டெண் (ASPI) 22,372.57 புள்ளிகளில் நிறைவடைந்து, முந்தைய நாளுடன் ஒப்பிடும்போது 51.49 புள்ளிகள் உயர்ந்தது. (ச-இ)



## பொன்னி அரிசி இறக்குமதி

கொழும்பு, ஒக்.16

கீரிச்சம்பா அரிசிக்கு மாற்றாகக் கருதப்படும் பொன்னிச் சம்பா அரிசியை இறக்குமதி செய்ய அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் நவம்பர் 15ஆம் திகதி வரை இந்த அரிசியை இறக்குமதிசெய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. சந்தையில் கீரிச்சம்பா அரிசிக்கு நிலவும் தட்டுப்பாட்டைக் குறைப்பதற்காக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## அஸ்வெசும விநியோகம்

கொழும்பு, ஒக்.16

அஸ்வெசும முதற்கட்டப் பயனாளிகளுக்கான இம்மாதக் கொடுப்பனவு நேற்று வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டுள்ளது என நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது.

இதன்படி, பயனாளிகளுக்கு 11 கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகை பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

## எகிறும் தேசிக்காய் விலை!

இலங்கையில் தேசிக்காயின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது என்று சந்தை வட்டாரம் தெரிவித்துள்ளது.

இதன்படி, ஒரு கிலோ கிராம் தேசிக்காய் 3,200 ரூபாவுக்கும் அதிகமான விலையில் விற்பனை செய்யப்படுகின்றது. சந்தைகளில் சில்லறை விலை 2,800 ரூபா முதல் 3,200 ரூபா வரையும் ஒரு தேசிக்காயினுடைய விலை 50 ரூபாவுக்கும் அதிகமாகவும் காணப்படுகிறது. கடந்த வாரத்துடன் ஒப்பிடும்போது நேற்று தேசிக்காயின் விலை மேலும் அதிகரித்துள்ளது. சந்தைக்கு தேசிக்காயின் வரவு குறைவடைந்து காணப்படுகின்றமையே குறித்த விலை அதிகரிப்புக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

**நாளை** வெள்ளிக்கிழமை - புரட்டாதி 31
17.10.2025
சுபநேரம் : 07.32 - 09.02
ராகுகாலம் : 01.32 - 03.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய இடத்தில் நெடுந்தூரசேவை பழைய இடத்தில் குறுந்தூரசேவை

## யாழ்.நகரின் நெரிசலைத் தவிர்க்கப் பின்பற்றுமாறு வடக்கு ஆளுநர் அறிவுறுத்து

**யாழ்ப்பாணம், ஒக்.16**

**யாழ்.நகரின் நெரிசலையும் நெருக்கடியையும் தவிர்க்கும் முகமாக குறுந்தூரப் பேருந்து சேவைகளை இரண்டு தரப்பும் தற்போதுள்ள பேருந்து நிலையத்திலிருந்தும் நெடுந் தூரச் சேவைகளை புதிய பேருந்து நிலையத்திலிருந்தும் இரு தரப்பும் முன்னெடுக்கவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பணித்துள்ளார்.**

யாழ்ப்பாணம் புதிய பேருந்து நிலையத்தின் இயங்குநிலை தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். நகரத்தில் பேருந்து நிலையம், மருத்துவமனை, வர்த்தக நிலையங்கள் என்பன அமைந்துள்ளன. இதனால் யாழ்.நகரின் எதிர்கால அபிவிருத்தி நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. யாழ். நகரத்தின் இயங்குநிலை என்பது பேருந்து நிலையத்தின் செயற்பாட்டில் தங்கியுள்ளது.

ஏனைய மாவட்டங்களிலுள்ள நகரத்தைப்போன்று எமது நகரத்தையும் மாற்றுவதற்கு ஒத்துழைக்கவேண்டும். எல்லோருக்கும் நகரத்தின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளது. எனவே, அதை நோக்கியதாக பேருந்து நிலையத்தின் செயற்பாடுகளை நாம் ஒழுங்குபடுத்தவேண்டும் - என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன், நகர அபிவிருத்தி அதிகாரசபையினர், வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையினர், வர்த்தக சங்கத்தினர், தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தினர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-66,20,113)

# தடைசெய்யப்பட்ட மீன்பிடி; 45 சந்தேகநபர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஒக்.16

கடந்த செப்ரெம்பர் 29 ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 7ஆம் திகதி வரையான 15 நாள்களில் உள்ளூர் கடற்பரப்புகளில் தடைசெய்யப்பட்ட மீன்பிடியில் ஈடுபட்ட 45 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இலங்கைக் கடற்படையினர், மீன்வளம் மற்றும் நீர்வளத் துறை மற்றும் யாழ்ப்பாண சிறப்புப் படையுடன் இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் இந்தக் கைது இடம்பெற்றது.


இதன்போது 11 டிங்கிப் படகுகள், இரண்டு பலநாள் மீன்பிடிப் படகுகள் மற்றும் கப்ரக வாகனமொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன. கிண்ணியா, முல்லைத்தீவு, குச்சவெளி, லங்காபட்டுன, கோட்பே மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டு அந்தந்த மீன்வள மற்றும் நீர்வளத்துறை அலுவலகங்களில் மேலதிக சட்டநடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ச-20)

# வேலன் சுவாமிகளுடன் மக்கள் முன்னணி சந்திப்பு

யாழ்ப்பாணம், ஒக்.16

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் கட்சியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர், சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு.வேலன் சுவாமிகளை நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீனத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினர்.

சுமார் ஒன்றரை மணித்தியாலம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. (ச-25,66)



# திருமறைக்கலாமன்றத்தின் வைரவிழாக் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.16

கலைப்பணியில் 60 ஆண்டுகளை நிறைவுசெய்யும் திருமறைக்கலாமன்றத்தின் வைரவிழா நிகழ்வுகள் இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக்கலாமன்ற அரங்கில் எதிர்வரும் 18ஆம்,19ஆம் திகதிகளில் மாலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளன.

நிகழ்வுகளில் நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் திருமறைக்கலாமன்றத்தின் ஏனைய பிராந்திய தமிழ், சிங்கள மன்றங்களும் கலந்துகொள்ளவுள்ளன.

முதல்நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை, சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். ஆசியுரைகளை பேராசிரியர் ம.பாலகைலாசநாதசர்மா, வண.கலைமாணி மீஹாஹயன்துரை சிறி விமலதேரர், அஷ்ஷைய்க் முஜிபுர் றஹ்மான் மௌலவி ஆகியோர் நிகழ்த்துவர்.

கலைநிகழ்வுகளாக பாணந்துறை, புத்தளம் திருமறைக்கலாமன்றங்கள் வழங்கும் நடனங்கள், திருமறைக்கலாமன்ற இளையோர் அவையினரின் ஒயிலாட்டம், திருமறைக்கலாமன்ற இசைக்கலைஞர் இ. ஜெயகாந்தனின் மெல்லிசை, இளவாலைத் திருமறைக்கலாமன்றம் வழங்கும் 'பாஞ்சாலி சபதம்' நடன நாடகம், யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகம் வழங்கும் 'சத்தியவான் சாவித்திரி' இசைநாடகம் என்பன இடம்பெறவுள்ளன.

இரண்டாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டச் செயலர் ம. பிரதீபன், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், கௌரவ விருந்தினராக யாழ்.மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு ப. யோ.ஜெபரட்ணம் அடிகளார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

கலைநிகழ்வுகளாக அவிசாவளைத் திருமறைக்கலாமன்றம் மற்றும் கலைத்தூது அழகியல் கல்லூரி வழங்கும் நடனங்கள், திருமறைக்கலாமன்றம் தயாரித்தளிக்கும் 'பூதத்தம்பி' நாட்டுக்கூத்து, கலைஞர் கௌரவிப்பு, நாடகப் பயிலக மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு என்பன இடம்பெறவுள்ளன.

நிகழ்வுகளில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு திருமறைக்கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது. (ச-41)

# ஆங்கில விருத்திப் பயிற்சி புதிய வகுப்புகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக்.16

இணுவில் பொது நூலக சிறுவர் திறன் விருத்தி மையத்தினால் முன்பள்ளிச் சிறார்கள் உட்பட 413 வயதுப் பிரிவு மாணவர்களுக்கான ஆங்கில திறன் விருத்திப் பயிற்சிக்கான புதிய வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

0770737919, 0212244770, 0212241930 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)



# நுணாவில் மேற்கில் வாய்க்கால் துப்புரவு

யாழ்ப்பாணம், ஒக்.16

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட நுணாவில் மேற்குப் பகுதியில் வெள்ளநீர் வடிந்தோடும் வாய்க்கால்கள் கடந்த இரண்டு நாள்களாக நகரசபையால் துப்புரவு செய்யப்பட்டுத் தூர்வாரப்பட்டது.

கடந்த வருடம் வெள்ள அனர்த்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில் நகரசபையின் வட்டார உறுப்பினர் மு.கோகுலறாஜின் ஆலோசனைக்கு அமைய மழைகாலங்களில் வெள்ள அனர்த்தத்தை ஏற்படுத்தக்கூடிய மேலதிக நீரை வெளியேற்றக்கூடியவாறு இந்தத் தூர்வாரும் பணி இடம்பெற்றது. (ச-28)

# இலங்கைக்குக் கடத்தவிருந்த மஞ்சள் மூடைகள் பறிமுதல்

சென்னை, ஒக்.16



இலங்கைக்குக் கடத்துவதற்காக இந்தியாவில் சல்லித் தோப்புக் கடற்கரையில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த சமையல் மஞ்சள் மூடைகள் இராமநாதபுரம் சுங்கத்துறை அதிகாரிகளால் நேற்றுமுன்தினம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இந்திய மதிப்பில் 3 இலட்சம் ரூபா மதிப்பிலான ஆயிரத்து 200 கிலோ மஞ்சள் மூடைகளே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-56,27,113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிளாஸ்ரிக் போத்தல்கள் வழங்கினால் பணம்

## 'சேவ் ஏ லைவ்' நிறுவனம் முன்மாதிரி

யாழ்ப்பாணத்தைப் பிளாஸ்ரிக் கழிவுகள் அற்ற நகரமாக மாற்றும் நோக்கில் வெற்றுப் பிளாஸ்ரிக் போத்தல்களுக்குப் பணம் வழங்க 'சேவ் ஏ லைவ்' நிறுவனத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். அதற்கமைய, 460, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள 'சேவ் ஏ லைவ்' நிறுவனத்தின் சேகரிப்பு மையத்துக்குக் கொண்டு வரப்படும் ஒரு வெற்று பிளாஸ்ரிக் போத்தலுக்குத் தலா ஒரு ரூபா வீதம் வழங்கப்படும். மேலதிகத் தகவல்களுக்கு 0779443577 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் 'சேவ் ஏ லைவ்' நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர். (ச-66)

## விற்பனையாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கும் பாதணி விற்பனை நிலையத்திற்கு விற்பனையாளர் தேவை.
(ஆண்கள் மட்டும்)
தொடர்பு: 077 795 3175

# நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் தினமும், பரிசளிப்பு விழாவும் கல்லூரி முதல்வர் பாலா நந்தீஸ்வரன் தலைமையில் கல்லூரியின் பவளவிழா மண்டபத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம அதிதியாக வடமாகாண பிரதி பிரதம செயலாளர் இ. சிவரூபன், சிறப்பு அதிதியாக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. சிவசிவா, கௌரவ அதிதியாக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் க. ஜெசிந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-25,63)

# கல்விக் கருத்தரங்கு


யாழ்ப்பாணம், ஒக்.16

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய்ப் பிரதேச சபையின்கீழ் இயங்கும் மானிப்பாய், ஆனைக்கோட்டை, பண்டத்தரிப்பு, மாதகல் ஆகிய பொதுநூலகங்கள் இணைந்து நடத்தும் உயர்தர தமிழ்ப்பாடமாண வர்களுக்கான கல்விக்கருத்தரங்கு மானிப்பாய் பிரதேசசபை ரவீந்திரன் கலாசார மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9மணி தொடக்கம் 12.30மணி வரை நடைபெறவுள்ளது.

இந்த வருடம் உயர்தரப்பரீட்சை எழுதவுள்ள தமிழ்ப்பாட மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் கல்விக்கருத்தரங்கை யாழ்.மாவட்ட பிரபல தமிழ்ப்பாட ஆசிரியரான நவரட்ணம் சத்தியவேந்தன் நடத்தவுள்ளார்.

உயர்தரப்பரீட்சை எழுதவுள்ள தமிழ் பாடத்துறையைச் சேர்ந்த மாணவர்களைக் கலந்துகொள்ளுமாறு மானிப்பாய்ப் பிரதேசசபை நூலக சமூகம் அறிவித்துள்ளது. (ச-41)

# கண்ணீர் அஞ்சலி



எமது ஆருயிர் நண்பனும், சகஉத்தியோகத்தருமாகிய

**அமரர் சுப்பிரமணியம் மதியோகநாதன் (மதி)**

(உள்ளூராட்சி உதவியாளர், LGA நகரசபை, சாவகச்சேரி)

அவர்களின் பிரிவால் பெரும் துயருற்றுள்ளோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

தோற்றம் 14.02.1968 மறைவு 15.10.2025

உள்ளூராட்சி உதவியாளர் சங்கம் வடக்கு மாகாணம்

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை

## 01.01.2026 தொடக்கம் 31.12.2026 வரையான காலப்பகுதிக்கு இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2026

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 16.10.2025 தொடக்கம் 29.10.2025 பிற்பகல் 2.00 மணிவரை (அலுவலக நேரம்)
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 30.10.2025 பிற்பகல் 2.00 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 30.10.2025 பிற்பகல் 2.00 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம்

**இறைச்சிக்கடைகளுக்கான கேள்வி அட்டவணை**

| இல. | கடை விபரம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| புலோப்பளை உப அலுவலகம் | | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 3,649,800.00 | 54,700.00 | 2,000.00 |
| 02 | ஆட்டிறைச்சிக்கடை | 44,665.40 | 5,000.00 | 2,000.00 |
| 03 | கோழியிறைச்சிக்கடை | 1,386,660.00 | 20,800.00 | 2,000.00 |
| முள்ளிப்பற்று உப அலுவலகம் | | | | |
| 04 | கோழியிறைச்சிக்கடை | 104,500.00 | 5,000.00 | 2,000.00 |

**நிபந்தனைகள்**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமூகமளிக்கவேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை" என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி" என்ற முகவரிக்கு 30.10.2025 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
04. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.
05. கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித்தொகையில் 1/3 பகுதியை செலுத்தி சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகொள்ளவேண்டும். மிகுதி தொகையினை 08 பகுதியாக பிரித்து ஒவ்வொரு மாதக்கட்டணமாக அடுத்தமாதம் 5ம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். தவறின் 10% தண்டமாக அறவிடப்படும்.
06. இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாத அறை வாடகையினை குத்தகைத்தொகையுடன் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் பாதுகாப்பு வைப்புப்பணமாக 03 மாத வாடகையினை முற்பணமாக செலுத்துதல் வேண்டும்.
07. சித்திகர குத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
08. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
09. இறைச்சிக்கடைகளை பெறுவோர் சபையினால் அனுமதிக்கப்பட்ட கொல்களத்திலேயே மாடு, ஆடு அறுத்தல் வேண்டும்.
10. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளருக்கு உண்டு.
11. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

சுப்பிரமணியம் சுரேன்,
தவிசாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,
பளை
16.10.2025.

(CS 46107 E)

# தவறவிடப்பட்டுள்ளது

கிளிநொச்சிக்கும் யாழ்பாணத்துக்கும் இடையில் பேர்ஸ் தொலைந்து விட்டது. அதனுள் காணப்பட்ட தேசிய அடையாள அட்டை (20016910070), சாரதி அனுமதிப்பத்திரம், பல்கலைக் கழக அடையாள அட்டை, ATM கார்ட், நூலக அடையாள அட்டை ஆகியன தவறவிடப்பட்டுள்ளது. அதனை கண்டு எடுத்தவர்கள் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
077 959 0609

(CS/59659) J-1

# பெயர் மாற்றம்

மட்டுவில் வடக்கு சந்திரபுரத்தைச் சேர்ந்த நடுவிலான் - நடேசு ஆகிய நான் 18.08.1965 ம் ஆண்டு தொடக்கம் இன்று வரை நடுவிலான் - நடேசு என எனது பெயரை பயன்படுத்தி வருகிறேன். 14.10.2025 ம் திகதி தொடக்கம் எனது பெயரை நடுவிலான் நடேசபிள்ளை என மாற்றம் செய்கிறேன் என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்.

நடுவிலான் - நடேசபிள்ளை

CR/46103 D*

# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 01 . 11 . 1934



உதிர்வு 20 . 09 . 2022

அமரர் **பொன்னம்பலம் கனகரத்தினம்**

(ஓய்வூதியர் - லக்சல)

திதி: தசமி

உங்கள் குரல் கேட்காத வீடும், உங்கள் கை படாத பொருட்களும்,
உலர்ந்து போன நதிகளாய் உள்ளுக்குள் அழுது கிடக்கின்றன.
உங்கள் கை பிடித்த நாள்களை நினைத்து இன்றும் நெஞ்சம் நிறைகிறது.
உங்கள் அன்பு ஒரு நினைவாக அல்ல எங்கள் வாழ்வின் மூச்சாக இருக்கிறது
ஒவ்வொரு மூச்சிலும் நீங்கள் இருக்கிறீர்கள் நினைவாக அல்ல - உயிராகவே

இல 53, சங்கரப்பிள்ளை வீதி
மானிப்பாய்.

உங்கள் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்

(CS/30587) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொருளாதார நோபல் பரிசு மூவருக்குப் பகிர்ந்தளிப்பு!

வொஷிங்டன், ஒக்.16

இந்த ஆண்டுக்கான பொருளாதார நோபல் பரிசுக்கு ஜோயல் மோக்கிர், பிலிப் அகியான் மற்றும் பீட்டர் ஹோவிட் ஆகிய 3 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டுக்கான நோபல் பரிசு கடந்த 6ஆம் திகதி முதல் அறிவிக்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் கடைசியாகப் பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுமை சார்ந்த பொருளாதார வளர்ச்சியை விளக்கியதற்காக இவர்களுக்கு இந்த விருது வழங்கப்படவுள்ளது.

தொழில்நுட்ப முன்னேற்றத்தின்மூலம் நீடித்த வளர்ச்சிக்கான முன் நிபந்தனைகளை அடையாளம் கண்டதற்காக, பரிசுத்தொகையில் 50 வீதம் ஜோயலுக்கு வழங்கப்படும். மீதம் உள்ள 50% பரிசுத்தொகை, படைப்பூக்க அழிப்புமூலம் நீடித்த வளர்ச்சிக்கான கோட்பாட்டை உருவாக்கியதற்காக, பிலிப் அகியான் மற்றும் பீட்டர் ஹோவிட் ஆகியோருக்கு வழங்கப்படவுள்ளது. மனித வரலாற்றின் பெரும்பாலான காலத்தில் வளர்ச்சியைவிட, பொருளாதார மந்தநிலையே வழக்கமாக இருந்து வந்துள்ளது. தொடர்ச்சியான வளர்ச்சிக்கு எதிரான அச்சுறுத்தல்களை நாம் உணர்ந்து, அவற்றை எதிர்கொள்ளவேண்டும் என்பதை அவர்களின் ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன எனக் கூறப்பட்டுள்ளது. (ச–இ)

THE HALO TRUST

## பணி வெற்றிட அறிவிப்பு: வாகனத் திருத்துனர்கள்

HALO நிறுவனமானது உலகின் மிகப்பெரிய மற்றும் பழமையான சர்வதேச மனிதாபிமான கண்ணிவெடி நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் அரசு சார்பற்ற அமைப்பாகும். (NGO). முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக, நாங்கள் உயிர்களைக் காப்பாற்றி வருகிறோம். போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் நிலங்களைப் பாதுகாப்பானதாக்குவதன் மூலம் அவர்களை மீட்டெடுக்க உதவுகிறோம். எங்கள் நோக்கம் உயிர்களைப் பாதுகாப்பதும், மோதலால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுப்பதும் ஆகும்.

HALO 2002 முதல் இலங்கையில் பணியாற்றி வருகிறது. இப்போது வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவில் அலுவலகங்களுடன் 1,200 க்கும் மேற்பட்ட ஊழியர்களைக் கொண்டுள்ளது. இன்றுவரை, HALO 300,000 க்கும் மேற்பட்ட கண்ணிவெடிகள் உட்பட ஒரு மில்லியனுக்கும் அதிகமான வெடிபொருட்களை பாதுகாப்பாக அழித்துள்ளது. HALO மற்றும் பிற கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைப் பங்குதாரர்கள், இலங்கையில் உள்ள அனைத்து அறியப்பட்ட வெடிமருந்து மாசுபாடுகளையும் 2028ஆம் ஆண்டுக்குள் அகற்றுவதற்காக ஒருங்கிணைந்து பணியாற்றி வருகின்றனர். இது, தனிநபர் எதிர்ப்பு கண்ணிவெடி தடை ஒப்பந்தத்தின் (Anti-Personnel Mine Ban Convention) மாநிலக் கட்சியாக இலங்கைக்கு உள்ள பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சியாகும். மெக்கானிக்கின் பொறுப்புகள்.

- தொழிற்சாலையின் தினசரி செயல்பாடுகளில், வேர்க்சொப் முகாமையாளர் , உதவி வேர்க்சொப் முகாமையாளர் மற்றும் 4-ஆம் நிலை மெக்கானிக்கிற்கு தேவையானபடி உதவி வழங்குதல்.
- வாகனங்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் அவற்றின் கூறுகள் மீது தடுப்பு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுதல்.
- வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் இயந்திர ஆலைகளில் (Mechanical plants) ஏற்படும் கோளாறுகளை சரிசெய்தல் மற்றும் பழுதுபார்த்தல் பணிகளைச் செய்தல்.
- வாகன உற்பத்தியாளர் வழங்கிய வழிமுறைகளின் அடிப்படையில், வாகனங்கள், இயந்திர ஆலைகள் (Mechanical plants) மற்றும் இயந்திரங்களில் திட்டமிட்ட பராமரிப்பு, மாற்றம் மற்றும் பரிசோதனைகளை மேற்கொள்ளுதல்.
- பயிற்சி நோக்கத்திற்காக நெருங்கிய மேற்பார்வையின் கீழ் திறமையான பணிகளைச் செய்தல்.
- மேற்பார்வையாளர்கள் வழங்கும் பணிகளைச் செய்தல், உதாரணமாக பழுதான கூறுகளை மாற்றுதல்.
- அனைத்து வேர்க்சொப் நடைமுறைகள் மற்றும் விதிமுறைகளைப் பின்பற்றுவதை உறுதி செய்தல்.
- கருவிகள், உபகரணங்கள் மற்றும் உதிரி பாகங்கள் சேமிப்பிடங்கள் உட்பட வேர்க்சொப்பை சுத்தமாகவும், பாதுகாப்பாகவும், ஒழுங்காகவும் பராமரித்தல்.
- வேர்க்சொப் முகாமையாளர், உதவி வேர்க்சொப் முகாமையாளர் மற்றும் 4-ஆம் நிலை மெக்கானிக் வழங்கும் பிற பணிகளைச் செய்தல்.

**தகுதிகள்:**

- செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம்.
- தொழிற்கல்வி பயிற்சி சான்றிதழ் அல்லது குறைந்தது 5 ஆண்டுகள் தொடர்புடைய அனுபவம்.

**குறிப்பு : வாகன உடற்கோப்பு திருத்துனர்கள் (Tinker) மற்றும் ஒட்டுத்தொழிலாளர்களும் (Welder) விண்ணப்பிப்பதற்கு ஊக்குவிக்கப்படுகின்றீர்கள்.**


அனைத்து விண்ணப்பங்களும் அக்டோபர் 23, 2025 க்குள் கீழே உள்ள முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ சமர்ப்பிக்கப்பட வேண்டும். "போதுமான விண்ணப்பதாரர்கள் இருந்தால், குறிப்பிடப்பட்ட தேதிக்கு முன்னதாகவே பணியை முடிக்க எங்களுக்கு உரிமை உண்டு." வெற்றிகரமான விண்ணப்பங்கள் மட்டுமே தொடர்பு கொள்ளப்படும். மேலும் தகவலுக்கு, 021 228 5466 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளவும். HALO அனைத்து பின்னணியிலிருந்தும் விண்ணப்பதாரர்களை இந்தப் பணிக்கு விண்ணப்பிக்க ஊக்குவிக்கிறது.

மனிதவள முகாமையாளர்
The HALO Trust
450 திருநகர் மேற்கு, கிளிநொச்சி
hr@halosrilanka.org

The HALO Trust is a company limited by guarantee
Registered in England No. 2228587 Registered Charity No. 1001813 & SC037870
Registered Office: 50 Broadway, London SW1H 0BL

## மரண அறிவித்தல்

பிறப்பு 29 . 11 . 1949



இறப்பு 14 . 10 . 2025

### தம்பு தர்மகுணசிங்கம்

வேலணை கிழக்கு 2ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பாரதி வீதி, கூமாங்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு தர்மகுணசிங்கம் அவர்கள் கடந்த 14.10.2025 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான தம்பு-முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சதானந்தலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற புஸ்பராணி, திலகவதி, யோகராணி, காலஞ்சென்ற ஜெயராணி, உதயராணி, நித்திய கல்யாணி, நவசோதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், மகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான இராசநாயகம், இராமச்சந்திரன், வீரசிங்கம், செல்வராசா மற்றும் செல்வநாயகம், சொக்கலிங்கம், செல்வநாயகம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், காயத்திரி (கனடா), இராகவேந்தன், கார்த்திகா(கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வக்குமரன் (கனடா), ஸ்ரீவிஜயகாந்தன் (பொது முகாமையாளர், ஜனசக்தி காப்புறுதி நிறுவனம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிஷனா, அக்ஷரா, ஆரூசன், அனிக்கா, ஆதேசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (16.10.2025) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப 03.00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக நெழுக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
**+94 774 685 283,**
**+94 771 888 316.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CR 46108) A

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

மண்ணில் 24 . 05 . 1955



விண்ணில் 18 . 09 . 2025

### சர்வஜீவதயாபரி பாஸ்கரன்

**(ஓய்வுநிலை ஆசிரியை - சர்வா ரீச்சர்)**

அமரத்துவமடைந்த எமது குடும்பத்தலைவி நோயுற்றிருந்த வேளையில் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய யாழ் போதனா வைத்தியசாலை மற்றும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள், பராமரிப்பு வழங்கியோர் மற்றும் பல்வேறு வழிகளிலும் உதவிகள் புரிந்த, ஆறுதல் கூறிய, அஞ்சலி செலுத்திய கல்விப் பெருந்தகைகள், உறவினர்கள், கல்லூரி நண்பர்கள், பல்கலைக்கழக நண்பர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

18.10.2025 சனிக்கிழமை முற்பகல் பத்து மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், நண்பகல் பன்னிரண்டு மணியளவில் நடைபெறும் மதியபோசனத்திலும் தங்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்போடு அழைக்கின்றோம்.

**சாயுடை**
**மாவிட்டபுரம்**

**கணவன் - ந.பாஸ்கரன்**
**மற்றும் சகோதரர்கள்**

(CS 59855) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 6க்கு மாணவர் அனுமதி புதிய சுற்றறிக்கை வெளியீடு

கொழும்பு,ஒக்.16

தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில், மாணவர்களைத் தரம் 6க்கு அனுமதிப்பது தொடர்பான புதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

பரீட்சைப் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு, மாணவர்கள் தரம் 6க்கு அனுமதி பெறத் தேவையான அனைத்து நடைமுறைகள் மற்றும் வழிகாட்டல்கள் இந்தச் சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.moe.gov.lk க்குப் பிரவேசிப்பதன்மூலம் இதனைப் பார்வையிடமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

# தே.ம.ச. அரசு பலவீனமடைவதை இந்தியா ஒருபோதும் விரும்பாது!

## உதய கம்மன்பில கூறுகின்றார்

கொழும்பு, ஒக்.16

தமது கோரிக்கைகளை நிறைவேற்றும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், மாகாணசபைத் தேர்தல் ஊடாக பலவீனமடைவதை இந்தியா விரும்பாது. அதனால் மாகாணசபைத் தேர்தல் விடயத்தில் இந்தியா அழுத்தம் கொடுக்காது என்று முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள் ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உள்ளூராட்சிசபைத் தேர்தலின் முடிவுகளை அடிப்படையாகக்கொண்டு மாகாணசபைத் தேர்தலை ஒப்பிட்டால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு வடமத்திய மாகாண சபையை மட்டுமே கைப்பற்றக்கூடியதாக இருக்கும். ஆனால் தற்போது அந்தநிலைமையும் மாறியுள்ளது. ஆளுங்கட்சியால் ஒரு சபையைக்கூடக் கைப்பற்றமுடியாமல்போகும். மாகாணசபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இந்த அரசாங்கம் இல்லை. எனினும், சர்வதேச அழுத்தங்களுக்கு அஞ்சுகின்றது. இந்தப் பிரச்சினையின் போது இந்திய அழுத்தம் இல்லை. இந்தியா கூறுவதற்கிணங்க இந்த அரசாங்கம் செயற்படுகின்றது. எனவே, மாகாணசபைத் தேர்தல் ஊடாக அரசாங்கம் பலவீனமடைவதை இந்தியா விரும்பாது - என்றார். (எ-44)

## நேபாளத்தில்...

திடம் ஒப்படைக்கப்பட்டனர். கொழும்பு அளுத்கடை நீதிமன்றத்துக்குள் பாதாளக் குழு உறுப்பினர் கணேமுல்ல சஞ்ஜீவ சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவத்தின் பிரதான சூத்திரதாரியாக இஷாரா செவ்வந்தி கருதப்படுகின்றார். அவரும், அவர் சார்ந்த குழுவினரும் நேபாளத்தில் வைத்து நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் நேற்று மாலை நாட்டுக்கு அழைத்துவரப்பட்ட நிலையில், குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அனைவரையும் பொறுப்பெடுத்துள்ளது. (அ-ம-26)

## இடமாற்றங்களுக்கு...

ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்துள்ளார். மேன்முறையீட்டுக் காலத்தை எதிர்வரும் 27ஆம் திகதிவரை நீடிக்குமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

ஆசிரிய இடமாற்றங்களில் தாம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும், ஆசிரிய இடமாற்றக் கொள்கையை முற்றாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியும் வடமாகாண ஆசிரியர்கள் சிலர் கடந்த சில நாள்களாக வடமாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறான நிலையில், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களுடன் விசேட கலந்துரையாடல் ஒன்றை ஆளுநர் நேற்று நடத்தினார். இதன்போதே, இடமாற்றங்களால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் மேன்முறையீடு செய்ய முடியும் என்று தெரிவித்தார்.


ஆசிரியர்களால் மேன்முறையீடு சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் அவை தொடர்பில் தனித்தனியாக ஆராயப்பட்டு தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் என்றும் ஆளுநர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். (அ-ம-66-26)

## இந்தியாவுக்குச்...

என மூன்று தினங்கள் கொண்டதாக பிரதமர் ஹரிணியின் இந்தியப் பயணம் அமையவுள்ளது. இந்தப் பயணத்தின்போது, இந்தியப் பிரதமர் மோடி, இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோரை பிரதமர் ஹரிணி சந்தித்துக் கலந்துரையாடல் நடத்துவார் என்று தகவல்கள் வெளிவந்துள்ளன.

சிந்தன் ஆராய்ச்சி அறக்கட்டளையின் ஏற்பாட்டில், இந்தியாவில் நாளையும், நாளைமறுதினமும் சிறப்பு உச்சிமாநாடு ஒன்று நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில், 'நிச்சயமற்ற காலங்களில் ஏற்படும் மாற்றங்களை வழிநடத்தல்' என்ற தலைப்பில் பிரதமர் ஹரிணி சிறப்புரை ஆற்றவுள்ளார் என்றும் கூறப்படுகின்றது. சீனப் பயணத்தை முடித்துக்கொண்டு இந்தியாவுக்குச் செல்வதால், பிரதமரின் இந்தியப் பயணம் மீது பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)


## கண்ணீர் அஞ்சலி



**இளையதம்பி இரட்ணம்**
**(முன்னாள் சந்தைப்படுத்தல்துறைத் தலைவர் யாழ். பல்கலைக்கழகம்)**

அவர்களின் பிரிவுச்செய்தி கேட்டு துயருறுவதுடன் அன்னாரின் குடும்பத்தினரின் துயரிலும் பங்கு கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ஸ்ரீ லங்கா புத்தக சாலை யாழ்ப்பாணம்**
**உரிமையாளரும், ஊழியர்களும்.**
**லங்கா புத்தகசாலை (பிறைவட் லிமிட்டட்) கொழும்பு.**
**உரிமையாளரும், ஊழியர்களும்.**

(CS 30601) A

## மரண அறிவித்தல்

தோற்றம்
13
.
02
.
1966



மறைவு
15
.
10
.
2025

**கந்தசாமி விமலேஸ்வரி**

கிராம்புவில் சாவகச்சேரி வடக்கு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், மீசாலை கிழக்கு மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி விமலேஸ்வரி அவர்கள் (15.10.2025) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான குஞ்சித்தம்பி - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், யோகேஸ்வரி, தங்கரத்தினம், ஸ்ரீபாலகிருஷ்ணன், சிவனேஸ்வரி, செல்வரூபன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கந்தசாமியின் அன்பு மனைவியும், கபிலன் (அமெரிக்கா), சிந்துஜா, வேணுகா ஆகியோரின் அன்பு தாயாரும், இன்பரூபன் (தேசிய வீடமைப்பு அதிகாரசபை), பவிந்தன், நிஷாந்தினி ஆகியோரின் மாமியாரும், ஆருத்ரன், மதுஷ்கா, கபிஸ்ரன், அக்ஷயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2025) வியாழக்கிழமை மீசாலை கிழக்கில் உள்ள அவரது இல்லத்தில் பிற்பகல் 02:00 மணியளவில் நடைபெற்று, அன்னாரது பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



தோற்றம்
16.06.1946

மறைவு
15.10.2025

**பாலசிங்கம் சாயாதேவி (வசந்தி)**

நாரந்தனையை பிறப்பிடமாகவும் சரவணையை வதிவிடமாகவும் கொண்ட பாலசிங்கம் சாயாதேவி அவர்கள் நேற்று (15.10.2025) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசிங்கம் - சொர்ணம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மல்லிகாதேவி மற்றும் தவபாலன், சறோஜினி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், புஸ்பராணி, திருக்குமார் ஆகியோரின் அன்பு மைத்துனியும், பவதாரணி, திவாகர், சாமகீதன் ஆகியோரின் மாமியாரும், திவ்வியா, சோபியா ஆகியோரின் பெரிய தாயாரும், கபிஷ்னா வின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.10.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சரவணை புன்னை மலர்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சரவணை கிழக்கு
சரவணை.

தகவல்:
பாலசிங்கம் தவபாலன்
077 3768 988

(CS 30602) A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு மருத்துவமனையில் குருதிப்பரிசோதனை நிறுத்தம்!

## உடன் நடவடிக்கை எடுக்குமாறு வேலணைப்பிரதேசபை உறுப்பினர் கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஒக். 16**

**நயினாதீவு பிரதேச மருத்துவமனையில் இரத்தப்பரிசோதனைக்கான வசதி வாய்ப்புகள் இல்லாத காரணத்தால் வயதானவர்கள், கர்ப்பிணிகள் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என வேலணைப் பிரதேசசபை உறுப்பினர் ம.கார்த்தீபன் தெரிவித்துள்ளார். வட மாகாணப் பிரதி பிராந்திய சுகாதாரசேவைப் பணிப்பாளருக்கு கடிதமொன்றை அனுப்பி அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.**

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள் ளதாவது-

கடந்த 2023ஆம் ஆண்டு மாசி மாதம் தொடக்கம் குருதி, சிறுநீர்ப் பரிசோதனைகள் நயினாதீவு பிரதேச மருத்துவமனையில் மாதாந்தம் குறிப்பிட்ட தினங்களில் இடம்பெற்றுவந்தன.

இருப்பினும் இந்த ஆண்டின் ஓகஸ்ட் மாதம் முதல் இந்தச் சேவையானது இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதனால் நோயாளர்கள் பேருந்து மற்றும் படகில் பயணித்து ஊர்காவற்றுறை மருத்துவமனைக்குச் சென்று பரிசோதனைகளை மேற்கொள்ளவேண்டியுள்ளது.

எனவே நயினாதீவு மருத்துமனையில் இப்பரிசோதனைகளை மேற்கொள்ள உரிய ஏற்பாடுகளைச் செய்துதரவேண்டும் - என்றுள்ளது. (ச-25)



## இந்தியத் தூதுவருடன் ரில்வின் சில்வா சந்திப்பு

கொழும்பு,ஒக்.16

இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வாவை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது இந்தியா-இலங்கைப் பங்குடைமையின் அண்மைய முன்னேற்றங்கள் குறித்து அவர்கள் விரிவாக உரையாடினர்.

மேலும், இரு நாட்டு மக்களின் பரஸ்பர செழுமைக்காக நெருக்கமான பொருளாதார உறவுகளை ஏற்படுத்த வேண்டியதன் வரம்பற்ற ஆற்றல் குறித்தும், அதனை வலுப்படுத்துவதற்கான வழிகள் குறித்தும் இருவரும் கருத்துகளைப் பரிமாறிக்கொண்டனர். (ச-இ)

## பாதாளக்குழு 'பஸ் லலித்' கைது

கொழும்பு,ஒக்.16

'பஸ் லலித்' என்று அறியப்படும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி லலித் கன்னங்கர, டுபாயில் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று இலங்கை பொலிஸ் உறுதிப்படுத்தியுள்ளது.

சர்வதேசசட்ட அமுலாக்க நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொண்ட கூட்டு நடவடிக்கையைத் தொடர்ந்து இந்தக் கைது இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இலங்கையில் கப்பம் வாங்குதல் மற்றும் துப்பாக்கிச்சூடு உள்ளிட்ட பல குற்றங்களுக்காக கன்னங்கர தேடப்பட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)



சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு ஒழுங்கமைக்கப்பட்ட விழிப்புணர்வுக் கருத்தரங்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது. கருத்தரங்கில் சமகாலத்தில் மாணவர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான குறுநாடகம் மற்றும் யோகாப் பயிற்சி என்பன யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட செயற்றிட்டத்தில் பயிற்றப்பட்ட வளவாளர் குழுவால் வழங்கப்பட்டது. (ச-இ)



## திசைகாட்டி அரசாங்கத்தால் இலங்கையில் முன்னேற்றம்

### பிரான்ஸ் தூதுவர் பாராட்டு

கொழும்பு,ஒக்.16

திசைகாட்டி அரசாங்கம் அதிகாரத்தைக் கைப்பற்றி, ஒரு வருடம் என்ற குறுகிய காலப்பகுதிக்குள் நாட்டில் பல முன்னேற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக தேர்தலுக்குப் பின்னர் வன்முறைகள் நிலவாமை மகிழ்ச்சி தருகின்றது என்று பிரான்ஸ் தூதுவர் ரெமி லெம்பர்ட் தெரிவித்தார்.

பிரான்ஸ் தூதுவர் மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா ஆகியோருக்கிடையிலான சந்திப்பு கட்சியின் தலைமை அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

சந்திப்பில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை முதன்மையாகக் கொண்ட தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்த பின்னர் முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத்திட்டங்களுக்கு தூதுவர் வாழ்த்துத் தெரிவித்தார். குறிப்பாக ஊழல் மோசடித் தடுப்பு மற்றும் தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்பல் நடவடிக்கைகளுக்கும் பாராட்டுத் தெரிவித்தார்.

பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், கடல் வளத்தைப் பாதுகாத்தல் உள்ளிட்ட திட்டங்களுக்கு தாம் உதவத் தயார் என்றும் தெரிவித்தார். அதேவேளை பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளில் பிரான்ஸின் முதல் வரிசை முதலீட்டாளர்களை இலங்கையில் முதலீடு செய்வதற்கு சந்திப்பில் உடன்பாடு எட்டப்பட்டது. (கஇ)



தென்மராட்சி பிரதேச செயலகமும் கைதடி சித்த ஆயுள்வேத வைத்தியசாலையும் இணைந்து நடத்திய ஆயுள்வேத வைத்தியமுகாம் அண்மையில் நுணாவில் மேற்கு கிராம அலுவலர் பிரிவில் நடைபெற்றது. (ச-இ)



ஏழாலை கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் சிறுவர் மற்றும் முதியோர்தின நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றன. நிகழ்வில் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சிறுவர்கள் மற்றும் முதியோர்கள் கலந்துகொண்டனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுண்நிதி...

வேலணைப் பிரதேசசபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் சிவலிங்கம் அசோக் குமார் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போது நுண்கடன் தொல்லையால் பிரதேச மக்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்கள் குறித்தும், வறிய மக்களை ஏப்பமிடும் நுண் நிதி நிறுவனங்களை கட்டுப்படுத்துவதன் அவசியம் தொடர்பிலும் உறுப்பினர் அனுசியா ஜெயகாந்தால் முன்மொழிவொன்று சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.
'வறிய மக்களை இலக்கு வைத்து, அதிக வட்டி வீதங்களுடன் பல நுண்நிதி நிறுவனங்கள் கடன்களை வழங்குகின்றன. கண்கவர் பரப்புரைகள் மூலம் பிரதேசத்துக்குள் உள்நுழைந்து மக்களை ஏமாற்றி தமது பொறிக்குள் வீழ்த்துகின்றனர். பெண் தலைமைக் குடும்பங்கள் இத்தகைய நுண்நிதி நிறுவனங்களால் பெரும் சுமைகளையும் துன்பங்களையும் எதிர்கொள்கின்றனர். சிலர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்க்கும் நிலையும் காணப்படுகின்றது' என்று உறுப்பினர் அனுசியா ஜெயகாந் தனது உரையில் குறிப்பிட்டார்.
இந்த முன்மொழிவின் அவசியம் கருதி, அதை உறுப்பினர் சு.பிரகலாதன் வழிமொழிந்தார். 'தற்போதுவரை நாற்பதுக்கும் அதிகமான நுண்நிதி நிறுவனங்கள் வேலணை பிரதேசத்துக்குள் ஊடுருவியுள்ளன. இவற்றில் பல நிறுவனங்கள் பதிவுகள் அற்றவையாகக் காணப்படுகின்றன' என்று அவர் சுட்டிக்காட்டினார். சபையின் உறுப்பினர்கள் அனைவரும் இந்தப் பிரேரணைக்குத் தமது ஆதரவை வழங்கினார்கள். இதையடுத்து, வேலணைப் பிரதேசசபையின் ஆளுகைக்குள் நுண்நிதி நிறுவனங்கள் செயற்பட வேண்டுமாயின் முறையான அனுமதி பெறப்பட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**நுண்நிதி நிறுவனங்களை முறைப்படுத்தவும் திட்டம்**

அத்துடன், வேலணை பிரதேசத்துக்குள் செயற்படும் நுண்நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகளை அழைத்து எதிர்வரும் வாரமளவில் கலந்துரையாடல்களை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
1. மீளச்செலுத்தக்கூடிய நிலைமையை அறிந்து கடன் வழங்குதல், 2. அளவுக்கு அதிகமான வட்டி வீதங்களைப் பேணாது இருந்தல், 3. பெண்தலைமைக் குடும்பங்களுக்கான கடனுதவிகளில் கூடுதலான சகிப்புத்தன்மையைப் பேணுதல், 4. கடன்களை வசூலிக்கும் நேரகாலங்களைப் பேணுதல் ஆகிய விடயங்களில் நுண்நிதி நிறுவனங்களை முறையான ஒழுங்கமைப்பின் கீழ் கொண்டுவரும் நோக்கில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. (அ-ம-26)

## மரண அறிவித்தல்

தோற்றம்
14 . 02 . 1968



மறைவு
15 . 10 . 2025

**சுப்பிரமணியம் மதியோகநாதன் (L.G.A)**
(நகராட்சிமன்றம், சாவகச்சேரி)

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும், 39/28 புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் மதியோகநாதன் அவர்கள் நேற்று (15.10.2025) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் - யோகேஸ்வரி தம்பதியரின் ஏகபுத்திரனும், காலஞ்சென்றவர்களான பரமு - சரஸ்வதி தம்பதியரின் மருமகனும், ஜெயராணியின் (இலங்கை மின்சாரசபை) அன்புக் கணவரும், சௌமியா (யாழ் பல்கலைகழகம்), ருக்சன், பிரத்வீன் (யாழ். இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெனிஸ்ரனின் அன்பு மாமனாரும், செல்வராசா (லண்டன்), வசந்தராணி, நவரட்ணராஜா (ஓய்வூதியர்), இரவிச்சந்திரன் (முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம் 2ம் கிளை), ஜெயராஜா (லண்டன்), ஜெயசந்திரன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2025) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 3.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 826 8205, 077 618 4500**

(CS/59658) J-1

## செவ்வந்தி...

என்ற விடயத்தைப் பொலிஸார் அறிந்த பின்னர், அவருடைய ஒவ்வொரு நகர்வுகளையும் நுட்பமாக அவதானித்து வந்துள்ளனர். இதையடுத்து, செவ்வந்தியைக் கைது செய்வதற்காக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியான ரொஹான் ஒலுகல நேபாளத்துக்குச் செல்வார் என்று தீர்மானிக்கப்பட்டது.
ஆனால், இந்த விடயம் வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டால், பொலிஸ்திணைக்களத்துக்குள் இருக்கும் பாதாளக் குழுக்களின் உளவாளிகள், தகவல்களை வழங்கிவிடுவார்கள் என்பதால் மிக இரகசியமான திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
இதன்படி, தனக்கு வைரஸ் காய்ச்சல் என்ற தோற்றப்பாட்டை சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ரொஹான் ஒலுகல ஏற்படுத்தியுள்ளார். ஆதலால், விடுப்பில் இருந்து சிகிச்சை பெறுவதைப்போன்று அனைவரையும் நம்பவைத்துள்ளார். இதைத் தொடர்ந்தே, அவர் நேபாளத்துக்குச் சென்றுள்ளார். நேபாளத்துக்குச் சென்ற பின்னரும், அவருடைய திறன்பேசிகள் உள்நாட்டில் இயங்கு நிலையில் இருந்துள்ளன. உச்சக்கட்ட அவதானத்துடன் இந்தத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இதைத்தொடர்ந்தே செவ்வந்தி கைது செய்யப்பட்டுள்ளார்.

**வெளிப்பட்ட புதிய தகவல்கள்**

கொழும்பு அளுத்கடை நீதிமன்றத்துக்குள் பாதாளக்குழு உறுப்பினர் கணேமுல்ல சஞ்சீவ சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர், மத்துகம பகுதிக்கு சென்ற செவ்வந்தி தனது முடியை கட்டையாக வெட்டிக்கொண்டு, ஆள் அடையாளத்தையும் மாற்றியுள்ளார். அதன்பின்னரே யாழ்ப்பாணம் வந்து இங்கிருந்து படகுமூலம் இந்தியா சென்றுள்ளார். சுபுன் என்பவரே அவரை காரில் யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச் சென்றுள்ளார். இந்தியாவில் இருந்து ரயில் மூலமே செவ்வந்தி நேபாளம் சென்றுள்ளார். அங்கு தலைமறைவாகி இருந்தபோதே கைது செய்யப்பட்டுள்ளார். (அ-ம-44)

## சிலாவத்துறை...

பட்டுள்ளன. மன்னாரில் தங்கியிருந்து மீன்பிடியில் ஈடுபட்டுவந்த, கற்பிட்டி பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய நபரே இவ்வாறு காணாமற் போயுள்ளார். இதையடுத்து, அவரை மீட்கும் நடவடிக்கையில் கடற்படையினரும் மீனவர்களும் இணைந்து ஈடுபட்டு வருகின்றனர். (அ-ம-213-23)

## பொலிஸ்...

கடந்த முப்பது வருடங்களாக கோப்பாய் பொலிஸ் நிலையம் இயங்கி வந்தது. இதையடுத்து, தமது காணிகளைத்தமிடம் ஒப்படைக்குமாறு கோரி, காணிகளின் ஏழு உரிமையாளர்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தனர்.
சம்பந்தப்பட்ட காணிகளில் இருந்து பொலிஸார் வெளியேறி, அவற்றை உரிமையாளர்களிடம் ஒப்படைக்குமாறு நீதிமன்றம் கடந்த ஜூன் மாதம் 27ஆம் திகதி உத்தரவிட்டது. எனினும், மூன்று மாதங்கள் கடந்தும் பொலிஸார் அந்தக் காணிகளில் இருந்து வெளியேறாமல் இருந்தனர். இதையடுத்தே, நீதிமன்றப் பதிவாளரின் முன்னிலையில், பொலிஸார் நேற்று வெளியேற்றப்பட்டு, காணிகள் அவர்களின் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. (அ-ம-66)

## யுவதிமீது...

டுள்ளார். அல்லைப்பிட்டிப் பகுதியில் உள்ள குறித்த யுவதியின் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து அவரைத் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முயன்ற நபர் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது. கடந்த 27ஆம் திகதி இந்த முறைப்பாடு வழங்கப்பட்ட போதிலும், சந்தேகநபர் பொலிஸாரின் நடவடிக்கையில் சிக்காமல் இரு வாரங்களுக்கு மேலாகத் தலைமறைவாக இருந்து வந்தார். இந்த நிலையில், அல்லைப்பிட்டி கடற்பரப்பில் வைத்து அவர் நேற்றுமுன்தினம் நள்ளிரவு கைது செய்யப்பட்டார்.
அவர் நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோதே, சந்தேகநபரை எதிர்வரும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-ம-26)

## மாகாணத்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
மாகாணசபைத் தேர்தலில் 'அரசாங்கத்தை வீழ்த்துவது உறுதி. அரசாங்கத்தைத் தோற்கடிப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றேன். எமது எழுச்சியால் ஏற்பட்ட அச்சம் காரணமாகவே, அரசாங்கம் மாகாணசபைத் தேர்தலைத் தாமதப்படுத்தி வருகின்றது.
தேர்தல் நடத்தப்படும் என்றும், தேர்தலை நடத்துவதில் உறுதியாக உள்ளதாகவும் அரசாங்கம் தெரிவிக்கின்றது. அப்படியானால், தேர்தல் திகதியை அறிவிக்குமாறு அரசாங்கத்தைக் கோருகின்றேன். எந்தவொரு பலப்பரீட்சைக்கும் நாங்கள் தயார் - என்றார். (அ-ம-44)

## பெருமளவு...

கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையவே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்களிடம் இருந்து 48 கிலோ 400 கிராம் கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்ட நிலையில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-ம-113)

## முன்னாள்...

சிரேஷ்ட விரிவுரையாளருமான இளையதம்பி இரட்ணம் (வயது-72) நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு காலமானார்.
சிறுநீரக செயலிழப்புக் காரணமாகவே அவர் காலமானார் என்று அவருடைய குடும்பத்தினர் உறுதிப்படுத்தியுள்ளனர்.
அன்னாரின் பூதவுடல் நாளை வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டுக் கஸ்தூரியார் வீதி, கொலைவிலக்கி அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படுமென அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். (அ-ம-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தமிழகத்தில் தங்கியிருந்த

# ஈழ அகதிகள் நால்வர் கடல்வழியாகத் தாயகம்

அனைவருக்கும் பிணை

மன்னார், ஒக். 16

தமிழகத்தில் அகதிகளாக தங்கியிருந்த நால்வர் கடல் வழியாக தாயகம் திரும்பி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தனர். மன்னாரைச் சேர்ந்த இவர்கள் இலங்கையில் இடம்பெற்ற போர் காரணமாக கடல் வழியாக படகில் சென்று தமிழகத்தில் தஞ்சமடைந்திருந்தனர். இலங்கையில் தற்போது இயல்பு வாழ்வு திரும்பியுள்ள நிலையிலேயே அவர்கள் தமிழ்நாட்டில் இருந்து படகுமூலம் மன்னாருக்கு வந்துள்ளனர். அவர்களைகடற்படையினரோ அல்லது பொலிஸாரோ கண்டுகொள்ளாதபோதும் அவர்கள் தாமாக பொலிஸ் நிலையம் சென்று விபரத்தை தெரிவித்துள்ளனர். இதனையடுத்து நால்வரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-23)

**வீடு வாடகைக்கு உண்டு**

இராமநாதன் வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

077 505 8560
076 882 8694



# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக்.16

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அதிபர் கே.தவகீஸ்வரன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் கலந்து கொண்டார். இதன்போது கலைநிகழ்வுகள், பரிசில் வழங்கல் என்பன இடம் பெற்றன. (ச-41-17)

உயர் விவசாயத் தொழில்நுட்பவியல்

# டிப்ளோமாப் பயிற்சிநெறி சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

கண்டி, ஒக்.16

இலங்கை விவசாயக்கல்லூரிகளில் உயர் விவசாயத் தொழில்நுட்பவியல் டிப்ளோமாப் பயிற்சிபெற்று வெளியேறும் மாணவர்களுக்கான விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கும் நிகழ்வு கண்டி பொல்கொல்லயில் அமைந்துள்ள மஹிந்த ராஜபக்ச கலையரங்கில் இன்று வியாழக்கிழமை காலை 10மணிக்கு இடம்பெறவுள்ளது.

விவசாய கால்நடை நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் டி.பி. விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறும் நிகழ்வில் கால்நடை காணி நீர்ப்பாசன விவசாய அமைச்சர் கே.டி. லால்கந்த பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.


இலங்கையில் உள்ள ஐந்து விவசாயக் கல்லூரிகளில் உயர் விவசாயத் தொழில்நுட்பவியல் டிப்ளோமாப் பயிற்சிபெற்ற மாணவர்கள் இந்த விருதுகளையும், சான்றிதழ்களையும் பெறவுள்ளனர். (ச-131)

# பருத்தித்துறை பிரதான வீதி வடிகால்களில் சிரமதானம்

யாழ்ப்பாணம், ஒக்.16

பருத்தித்துறை பிரதான வீதியில் வடிகால்கள் மற்றும் வெள்ள வாய்க்கால்கள் துப்புரவு செய்யப்பட்டுவருகின்றன. மழைக்காலம் ஆரம்பித்துள்ளநிலையில் இந்தப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ச-25, 17)

# மரண அறிவித்தல்



## இளையதம்பி இரட்ணம்

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் வடக்கை பிறப்பிடமாகவும், இல. 12/1 புகையிரத வடக்கு வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி இரட்ணம் (முன்னாள் சந்தைப்படுத்தல் துறைத் தலைவர், யாழ் பல்கலைக்கழகம்) அவர்கள் நேற்றுமுன்தினம் (14.10.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - நாகம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான ஜோசப் பிரான்சிஸ் - பூமணி தம்பதியரின் அன்பு மருமகனும், றெஜி பிரான்சிஸ்கா (முன்னாள் பகுதித் தலைவர், யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம், தேசிய பாடசாலை) அவர்களின் அன்புக் கணவரும், றஜிந் வேஜில் (Transilator Australia), றொசி ஹரிந் (பொறியியலாளர் Australia) ஆகியோரின் அன்புத் தந்தையும், தேவி (Ausstralia), டிலக்ஷி (கணக்காளர் Australia) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஓவியனின் அன்புப் அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (17.10.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு கஸ்தூரியார் வீதி, கொலைவிலக்கி அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம் 13.09.1953 | மறைவு 14.10.2025

இல. 12/1 புகையிரத வடக்கு வீதி,
கந்தர்மடம்

தகவல்:
குடும்பத்தினர்
077 502 6827

(CS/59654) J-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.10. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org